25.03.2026

அ.வ.எண். 24/2021

வா.சா.1 – திரு. சிவசாமி, த/பெ. ராமசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 25.03.2026 is accordance with the provision of Act X of 3331

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. புல எண்.467/B1 சொத்துக்கு 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் ஆறுமுகம் பெயரில் பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 கிரயத்திற்கு பின்னிட்டு தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு இருந்ததால் தான் பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஜீவனாம்ச செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கப்பட்டது 1956 என்றும், நான் பிறந்தது 1958 ம் வருடம் என்றால் சரிதான். என் அக்கா வா.சா.ஆ.1 ஜீவனாம்ச செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பின்னிட்டு பிறந்தார் என்றால் எனக்கு தெரியாது.

2. வா.சா.ஆ.1 ஜீவனாம்ச செட்டில்மெண்ட் ஆவணமானது நானும், என் அக்காவும் பிறப்பதற்கு முன்பாக ஏற்பட்டது என்றால் சரிதான், என் பெற்றோர் ஒன்றாக வசித்து வந்தனர் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஜீவனாம்ச செட்டில்மெண்ட் ஆவணம் பெயரளவில் ஏற்பட்ட ஆவணம் என்றும், அது அமல்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்ட பின்னிட்டு, என் பெற்றோர் ஒன்றாக வசித்து வந்ததால் மேற்படி ஆவணம் அமலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில், என் தாயாரின் இறப்பிற்கு பின்னிட்டு என் அக்கா வசித்து வந்தார் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. வா.சாஆ.2 கிரய ஆவணமானது, பிரதிவாதிகளின் சித்தப்பா பழனிச்சாமி எனது தகப்பனார், மற்றும் என் தாத்தாவிற்கு மது வாங்கி கொடுத்து அதன் அடிப்படையில் எழுதி வாங்கப்பட்டது என்பதற்கு ஆவணமோ, சாட்சியமோ இல்லை என்றால் தெரியவில்லை. வா.சா.ஆ.2 கிரயத்திற்கு பின்னிட்டு

பழனிச்சாமியின் அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வந்தது என்றால் சரியல்ல. அவர் இந்த ஊரில் இல்லை. வேறு ஊரில் இருந்தார். பழனிச்சாமி பொன்னேகவுண்டன் புதூரில் உள்ளார். வா.சா.ஆ.2 கிரயத்திற்கு பின்னிட்டு தான் பழனிச்சாமி தான் 1979 ஆண்டு வரை தாவா சொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்தார் என்றால் சரியல்ல. அவர் பொன்னேகவுண்டன் புதூரில் தான் உள்ளார். நான் இந்த வழக்கில் பழனிச்சாமியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

4. பிரதிவாதிகள் மற்றும் அவரது குடும்பத்தார் அனுபவத்தில் வா.சா.ஆ.2 1969 ம் ஆண்டில் இருந்து சொத்து உள்ளதால் எதிரிடை பாத்தியம் மூலம் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தை குறித்து எனக்கு தெரிந்தவுடன் பிரதிவாதிகளிடம் கேட்டேன் என்றும், அவர்கள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் நுழைய முற்பட்டனர் என பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. அருகில் இருந்தவர்களின் உதவியுடன் நான் அவர்களை தடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் யார், யார் உதவியுடன் தடுத்தேன் என்றால் அடுத்தவர்களை கொண்டு கேட்கவில்லை, நானாக தான் கேட்டேன். மற்றவர்களை வைத்து தடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

5. யார், யார் பாகம் செய்து கொள்ளலாம் என முடிவு செய்தோம் என்றால் சித்தப்பாவும், நானும் பேசிக்கொண்டோம். சொத்து என் அம்மாவுக்கு ஒதுக்கியது என சொல்லியுள்ள நிலையில் என் அக்காவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், அவர் எனக்கு இந்த வழக்கை நடத்த பொது அதிகார ஆவணம் வழங்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் பட்டா, சிட்டா, அடங்கல், RSR பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது என்றும், அதில் எங்களது பெயரை சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான்.

6. 1969 ம் ஆண்டு முதல் வழக்கு சொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளனர் என்றும் வா.சா.ஆ.1 ஜீவனாம்ச செட்டில்மெண்ட் ஆவணம் அமல்படுத்தவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தேவையான தரப்பினரான

பழனிச்சாமி மற்றும் எனது சகோதரி சாந்தாமணி ஆகியோர்களை சேர்க்காததாலும், 4 ம் பிரதிவாதி கவிதாவை தேவையற்ற தரப்பினரை சேர்த்துள்ளதாலும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கில் வழக்கு மூலம் இல்லை என்றும், வா.சா.ஆ.2 கிரய பத்திரம் குறித்து எனக்கு ஏற்கனவே தெரியும் என்றும், வழக்கிற்காக வில்லங்கம் எடுத்து பார்த்தபோது தெரியவந்தது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur